சிந்துவெளி நாகரிகம்

இடப்பெயரியல் (Toponymy) ஓர் ஆய்வு[1]



(மொழியியல் பகுப்பாய்வு மற்றும் வரலாற்றுத் தரவுகளின் அடிப்படையில்)

மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பா பெயர் விளக்கம்

---

[1] **கட்டுரையாளர்** -   காசிஸ்ரீ முனைவர் கி. காளைராசன், (மேனாள் துணைப் பதிவளார், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி), kalairajan26@gamil.com WhatsApp : +91 9443501912

உலக நாகரிகங்களின் வரலாற்றில் சிந்துவெளி நாகரிகம் (ஹரப்பா - மொஹஞ்சதாரோ) மனித குலத்தின் மிக உன்னதமான நகரக் கட்டமைப்பைக் கொண்ட ஆதி நாகரிகமாகத் திகழ்கிறது. இந்நகரங்கள் தோன்றிய காலகட்டம் மற்றும் அவற்றின் அழிவிற்குப் பிந்தைய பண்பாட்டுத் தொடர்ச்சி குறித்து பல்வேறு ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, சிந்துவெளி நாகரிகத்தின் முதன்மை நகரங்களான 'ஹரப்பா' மற்றும் 'மொஹஞ்சதாரோ' ஆகிய பெயர்களின் பின்னணியில் அமைந்துள்ள மொழியியல் கூறுகள், இந்தத் தொன்மையான நாகரிகத்திற்கும் பண்டைய தமிழர்களின் மொழி மற்றும் பண்பாட்டிற்கும் இடையே உள்ள ஆழமான உறவுகளை வெளிப்படுத்துகின்றன.

சிந்து வெளி (ஹரப்பா) நாகரிக முத்திரைகள் மற்றும் அவற்றின் எழுத்துகள் இன்றுவரை முழுமையாக வாசிக்கப்படவில்லை. இது மொழியியல் மற்றும் தொல்லியல் வரலாற்றில் இன்னும் தீர்க்கப்படாத புதிராகவே உள்ளது. எனினும், உலகின் பல அறிஞர்கள் தங்களின் ஆய்வுகளின் அடிப்படையில் சில முக்கிய கோட்பாடுகளை முன்வைத்துள்ளனர்:

- **அஸ்கோ பர்போலா (Asko Parpola):** பின்லாந்து நாட்டைச் சேர்ந்த இந்த ஆய்வாளர், முத்திரைகளில் உள்ள மீன் உருவங்களை வைத்து சிந்துவெளி மொழியானது 'திராவிட மொழிகளின் தாய்மொழியாக' (Proto-Dravidian) ஆக இருக்கலாம் என்று கருதுகிறார்.
- **ஐராவதம் மகாதேவன்:** சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்ற கருத்தை ஆதரித்து, குறியீடுகளின் வடிவங்களை அட்டவணைப்படுத்தியுள்ளார்.
- **எஸ். ஆர். ராவ்:** இவர் முத்திரைகளை ஆரிய மொழியுடன் (Sanskrit) தொடர்புபடுத்தி, இது ஒரு செமிடிக் (Semitic) எழுத்து முறையின் வளர்ச்சி என்று வாசித்துள்ளார்.
- பண்பாட்டு ஆய்வாளர் ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் சிந்துவெளி விட்ட இடமும் கீழடி தொட்ட இடமும் ஒன்று! என்று கருதுகிறார்.
- ஆய்வாளர் **பூர்ணசந்திர ஜீவா (PoornaChandra Jeea, நாகை. ப. ஜீவா)**, சிந்துவெளி முத்திரைகளில் உள்ளவை தமிழ் எழுத்துகளே என வாதிட்டு, அவற்றை வெற்றிகரமாகப் படித்துக் காட்டியுள்ளார். இந்த முத்திரைகள் சித்திர எழுத்துகள் அத்தனையும் தமிழ் எழுத்து வடிவங்களாகும். முத்திரைகளில் உள்ள குறியீடுகள் 16 மெய்யெழுத்துகளாகவும், 6 உயிரெழுத்துகளாகவும் தமிழ்-பிராமி (தமிழி) எழுத்துகளுடன் நேரடியாகப் பொருந்துகின்றன.

- ஆய்வாளர் **திருச்சி தி.லெ. சுபாஷ் சந்திரபோஸ் ஐயா**, சிந்து சமவெளி நாகரிக முத்திரைகளில் உள்ள குறியீடுகள் **பழங்காலச் செந்தமிழ்** என்று நிறுவி வருகிறார். 12 உயிரெழுத்துகளுக்கும், 18 மெய்யெழுத்துகளுக்கும் உரிய சிந்துவெளி எழுத்துக்களைப் பட்டியலிட்டுப் படித்துக் காண்பிக்கிறார். பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியும், பல்வேறு கருத்தரங்கங்கள் மற்றும் காணொளிகள் வாயிலாக தனது கருத்துக்களைப் பரப்பியும் வருகிறார்.

சிந்து சமவெளி நாகரிக முத்திரை எழுத்துகளின் அடிப்படையில் **மொஹஞ்சதாரோ** மற்றும் **ஹரப்பா** நகரங்களின் பண்டைய பெயர்கள் என்னவென்று இன்றளவும் சரியாக அறியப்படாமல் உள்ளது. இந்த இரண்டு தொல்லியல் ஆய்வுத் தளங்களின் பெயர்ச் சொற்களை **இடப்பெயரியல், சொற்பிறப்பியல் மற்றும் மொழியியல்** அடிப்படையில் ஆராய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கம்.



மொஹஞ்சதாரோ - இந்த நகரம் அழிந்து பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, இடிந்துபோன கட்டிடங்களின் மேல் அடுத்தடுத்து மண் அடுக்குகளாகப் படிந்து

அப்பகுதியில் மண்மேடுகள் மணற்குன்றுகள் உருவாகியுள்ளன. 1922-ல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் முதன்முதலில் இந்த இடத்தை அகழ்வாராய்ச்சி செய்தபோது, உள்ளூர் மக்கள் **"சிந்தி"** மொழியில் இந்த இடத்தின் பெயரை "மொஹஞ்சதாரோ" என்று கூறினர். **"மொஹஞ்சதாரோ"** என்ற பெயர்ச் சொல்லிற்கு நேரடியான பொருள் **'இறந்தவர்களின் மேடு'** என்பதாகும். *'மயென்'* அல்லது *' மோஹேன்'* என்றால் *' மேடு'* 'உள்ளடங்கிய' *என்று பொருள். 'ஜோ'* என்றால் *'இறந்த' என்று பொருள். 'தாரோ'* என்றால் சிந்தி மொழியிலிருந்து உருவானது என்று பொருள் – என்று விளக்கங்கள் கூறுகின்றனர்.



ஹரப்பா - இந்த நகரத்தின் உண்மையான பெயர் என்ன என்பது தொல்லியல் ஆய்வாளர்களால் இன்றுவரை அறியப்படாமல் உள்ளது. பிரிட்டிஷ் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரும் முதன்முதலில் இத்தளத்தை அகழ்வாராய்ச்சி செய்தபோது, அருகிலிருந்த உள்ளூர் மக்கள் இந்த இடத்தின் பெயரை **"ஹரப்பா"** என்று கூறினர்.

திராவிடத் தொடர்புகள்: பல முக்கிய மொழியியலாளர்களும் இந்தியவியல் அறிஞர்களும், இப்பகுதியின் பண்டைய மொழியானது திராவிட மொழி அடிப்படை இருந்திருக்கலாம் என்று கருதுகோள் முன்வைக்கின்றனர்.

பண்டைய இடப்பெயரியல் (மொழியியல் ஆய்வு)

1. 'ஹரப்பா' பெயர்க்காரணம்: சிவ வழிபாட்டு மொழியியல் எச்சம்

சிந்துவெளியின் முதன்முதலில் கண்டறியப்பட்ட முதன்மைத் தளம் 'ஹரப்பா' ஆகும். இதன் பெயரமைப்பைத் தமிழ் மொழியியல் நோக்கில் பகுக்கும்போது வியக்கத்தக்க உண்மைகள் புலப்படுகின்றன:

Harappa = Hara(n) + Appa → ஹரன் (அரன் - சிவபெருமான்) + அப்பா (தந்தை)

- **பெயர்ப் பகுப்பாய்வு:** 'ஹரப்பா' (Harappa) என்ற சொல் **ஹர + அப்பா** என்ற இரு சொற்களின் சேர்க்கையாக அமைகிறது. இதில் 'ஹரன்(அரன்)' என்பது முக்கண் இறைவனான சிவபெருமானையும், 'அப்பா' என்பது தமிழின் உன்னத உறவுப் பெயரான தந்தையையும் குறிக்கும் தூய தமிழ்ச் சொற்களாகும்.
- **பண்பாட்டுத் தொடர்பு:** சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட யோக நிலையில் அமர்ந்துள்ள பசுபதி முத்திரை சிவ வழிபாட்டின் ஆதி வடிவம் என்பதை இந்த மொழியியல் பகுப்பாய்வு மேலும் உறுதிப்படுத்துகிறது.

2. 'மொஹஞ்சதாரோ' பெயர்க்காரணம்: திருமால் வழிபாட்டுத் தொடர்பு

சிந்து சமவெளியின் மற்றொரு பிரம்மாண்ட நகரமான மொஹஞ்சதாரோவின் பெயரிலும் பாரதத்தின் ஆதி ஆன்மீகக் கூறுகள் தமிழ்ப் பெயர் விகுதிகளுடன் இணைந்துள்ளன.

Mohenjodaro = Mohan + jodar + o
Mohen = Lord Vishnu → ஹரி (அரி – திருமால்) + jodar → சதர் (கூட்டத்தினர்)

- **நெடுமால் வர்ணனை:** இச்சொல்லின் முதற்பகுதியான 'மொஹஞ்சதாரோ' என்பது **மோகன் + சதர் + ஓ** என்ற அமைப்பைக் கொண்டது. இதில் 'மோகன்' (Mohen) என்பது பேரழகனான விஷ்ணுவை (திருமால்) குறிக்கும் சொல்லாகும். ‘சதர்’ என்றால் 100க் கணக்கானவர்கள் கூடியுள்ள கூட்டம் என்று பொருள். ‘ஓ’ என்பது ஒரு பெயரை அழைக்கும் முறை.

- **தமிழ்ப் பெயர் விகுதி:** 'மோகன்' என்ற சொல்லில் உள்ள **'அன்'** என்பது தூய தமிழின் ஆண்பால் பெயர்விகுதியைக் (Masculine Suffix) கொண்டு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஹரப்பா என்பது தமிழில் அரப்பா என்றாகும். **ஹரப்பா என்றால் 'அர(ன்) அப்பா' என்றும், மொஹஞ்சதாரோ என்றால் 'அரி கூட்டத்தினர்' என்றும்** பொருள் கொள்ள முடிகிறது. அரன் + அரி (ஹரன்+ ஹரி) பெயர்களை அடிப்படையாக இந்த நகரங்கள் கொண்டுள்ளன என்று பொருள் கொள்ள முடிகிறது.

3. தொல்பொருள் மாநாட்டு மரபும் நகரங்களின் தோற்றமும்

தொல்லியல் துறையின் சர்வதேச விதிகளின்படி, ஒரு நாகரிகத்தின் பெயரிடல் முறை மற்றும் அதன் காலக்கட்ட எல்லைகள் பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றன:

- **ஹரப்பா நாகரிகம் பெயர்க்காரணம்:** தொல்பொருள் மாநாட்டின் உலகளாவிய விதிகளின்படி, ஒரு நாகரிகத்தில் முதன்முதலில் அகழ்வாய்வு செய்யப்பட்டு கண்டறியப்படும் இடத்தின் பெயரைக் கொண்டே ஒட்டுமொத்த நாகரிகமும் அழைக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையிலேயே, சிந்துவெளி நாகரிகத்திற்கு **'அரப்பா நாகரிகம்'** என்று பெயரிட்டு அழைக்கத் தொடங்கினர்.

- **காலப் பழைமை:** சிந்துவெளி நாகரிகத்தின் ஆதி குடியேற்றப் பகுதியாகக் கருதப்படும் 'மெகெர்கர்' போன்ற தளங்களின் தொல்லியல் ஆய்வுகள், இதன் வேர்களைத் தோராயமாக **கி.மு 6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட** பழமைக்குக் கொண்டு செல்கின்றன.

- **முதிர்ந்த அரப்பன் காலகட்டம்:** சிந்து நதிக்கரையின் பஞ்சாப் மற்றும் சிந்து பள்ளத்தாக்குகளில் மொஹஞ்சதாரோ மற்றும் அரப்பா ஆகிய இரு பெரும் நகரங்கள் கி.மு. 2600-ஆம் ஆண்டுகளில் தோன்றிச் செழித்தன. குறிப்பாக, கி.மு 2600 முதல் 1900 வரையிலான காலப்பகுதி 'முதிர்ந்த அரப்பன் காலகட்டம்' (Mature Harappan Phase) என்று அழைக்கப்படுகிறது.

4. அரப்பாவின் நகரக் கட்டமைப்பும் மக்கள் தொகையும்

அரப்பா என்பது ரவி நதிக்கரைக்கு அருகில் அமைந்துள்ள ஒரு கிராமத்தின் பெயரிலிருந்து பெறப்பட்ட தொல்லியல் தளமாகும். இத்தளத்தில் வெண்கலக் காலத்தைச் சேர்ந்த பிரம்மாண்ட கோட்டை நகரத்தின் இடிபாடுகள் அக் காலகட்டத்தின் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பறைசாற்றுகின்றன.

- **பரப்பளவும் வாழ்விடமும்:** இக்கோட்டை நகரம் சுமார் **370 ஏக்கர் பரப்பளவில்** விரிந்து பரந்திருந்தது. அக் காலகட்டத்திலேயே இத்தளத்தில் சுமார் **23,500 குடும்பங்கள்** மிக நேர்த்தியாக வாழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

- **கட்டுமானப் பொருட்கள்:** வீடுகள் அனைத்தும் இயற்கைச் சீற்றங்களைத் தாங்கும் வண்ணம் களிமண்ணும், ஒரே சீரான அளவில் சுடப்பட்ட செங்கற்களும் கொண்டு தற்காலப் பொறியியல் முறைக்கு இணையாகக் கட்டப்பட்டிருந்தன. இந்நகர அமைப்பானது சிந்துவெளி நாகரிகத்தையும், அதனைத் தொடர்ந்து நிலவிய 'கல்லறை எச் கலாச்சாரத்தையும்' (Cemetery H Culture) சார்ந்தது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

5. தமிழ்ப் பெயர் ஒற்றுமை: ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய வடமேற்கு எல்லைப் பகுதிகளில் இன்றும் நூற்றுக்கணக்கான தமிழ் ஊர்ப்பெயர்கள் புழக்கத்தில் உள்ளன. ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி (IAS) மற்றும் வரலாற்று ஆய்வாளரான **ஆர். பாலகிருஷ்ணன்** மேற்கொண்ட விரிவான "கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம்" (KVT Complex) ஆய்வின் மூலம் இந்த உண்மை வெளிச்சத்திற்கு வந்தது. கொற்கை, தொண்டி, வஞ்சி, மத்ரா, அம்பர், தோட்டி, ஈழம், கச்சி என்ற பெயர்களில் பாக்கிஸ்தானில் ஊர்கள் உள்ளன. பூம்புகார், கொற்கை, கூடல் என்ற பெயரில் ஆப்கானிஸ்தானில் ஊர்கள் உள்ளன. காவேரி, பொருநை என்ற பெயரில் ஆறுகள் ஓடுகின்றன. இந்தப் பெயர்கள் அனைத்தும் 4,000 ஆண்டுகளுக்கு முந்தைய சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் பழந்தமிழர்களுக்கும் உள்ள ஆழமான தொன்மையைக் காட்டுகின்றன. இப்பெயர்கள் எதுவும் வடமொழி (சமஸ்கிருதம்) அல்லது வேத இலக்கியங்களில் காணப்படவில்லை; மாறாக, சங்க இலக்கியங்களில் மட்டுமே இவை பதிவு செய்யப்பட்டுள்ளன.

முடிவுரை - சுருக்கமாகக் கூறின், 'ஹரப்பா' மற்றும் 'மொஹஞ்சதாரோ' என்ற சிந்துவெளியின் இரு பெரும் தலை நகரங்களின் பெயர்களில் அமைந்துள்ள **'அரன் அப்பா'** என்ற உன்னதமான உறவுப் பெயரும், **'மோகன்'** என்ற திருமாலின் பெயரும் தற்செயலாக அமைந்தவை அல்ல. அவை தூய தமிழ்ப் பெயர்ச் சொற்களாக அமைந்து ஆன்மீகத் தொன்மங்களோடு (சிவன் மற்றும் திருமால்) பொருந்திப் போவதால், இந்த மிகப்பழைமையான நகரநாகரிகமானது பண்டைய தமிழர்களது ஆதி நாகரிகமே என்பதை மொழியியல் மற்றும் தொல்லியல் சான்றுகள் ஒருசேர மெய்ப்பிக்கின்றன.

•••••